டிரினிடி மகளிர் கல்லூரி (கலை&அறிவியல்)
நாமக்கல் – 637002.
தமிழாய்வுத்துறை

*2023 -2024 ஆம் கல்வியாண்டு(இரட்டைப்பருவம்)*
*முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு*

# மனித உரிமைகள் ( 23PHR01 )

**வழங்கியவர்**

**இரா.அ.அனிதா**
**உதவிப் பேராசிரியர்**

**தமிழாய்வுத்துறை.**

**http://www.trinitycollegenkl.edu.in/**

## மனித உரிமை

**மனித உரிமை** என்பது, ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப் பெறவேண்டிய மற்றும் உரித்தான அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும். மனிதன் என்றாலே அவன் இவைகளால் வாழ முடியாது என கருதப்படும் அடிப்படையான தேவைகளை உள்ளடக்கிய உரிமைகள் இதில் சாரும்.

இந்த உரிமைகளை "மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகளாக"மனித உரிமைகள் என்றால் என்ன?கருதப்படுகின்றன. இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல் உள வலு ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதருக்கும் இருக்கும் இந்த அடிப்படை உரிமைகள், மனிதர் சுதந்திரமாக, சுமுகமாக, நலமாக வாழ அவசியமான உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

## அடிப்படை மனித உரிமை வகைகள்

1. வாழும் உரிமை
2. உணவுக்கான உரிமை
3. நீருக்கான உரிமை
4. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்/பேச்சுரிமை
5. சிந்தனைச் சுதந்திரம்
6. ஊடகச் சுதந்திரம்
7. தகவல் சுதந்திரம்
8. சமயச் சுதந்திரம்
9. அடிமையாகா உரிமை
10 சித்தரவதைக்கு உட்படா உரிமை

11. தன்னாட்சி உரிமை/சுயநிர்ணயம்
12. ஆட்சியில் பங்குகொள்ள உரிமை
13. நேர்மையான விசாரணைக்கான உரிமை
14. நகர்வு சுதந்திரம்
15. கூடல் சுதந்திரம்
16. குழுமச் சுதந்திரம்
17. கல்வி உரிமை
18. மொழி உரிமை
19. பண்பாட்டு உரிமை
20. சொத்துரிமை
21. தனி மனித உரிமை

## வாழ்வுரிமை

வாழும் உரிமை இலிருந்து வழிமாற்றப்பட்டது **வாழ்வுரிமை** அல்லது வாழ்வதற்கான உரிமை என்பது எல்லா மனிதருக்கும் உரித்தான ஓர் அடிப்படை மனித உரிமை ஆகும். குறிப்பாக பிற மனிதர்களால் கொல்லப்படாமல் இருப்பது வாழும் உரிமை ஆகும்.

வாழும் உரிமைஇனப்படுகொலை, சட்டத்துக்குப்புறம்பான படுகொலைகள், தன்னிச்சையான படுகொலைகளை குற்றச்செயல்களாக ஆக்குகிறது. இந்த உரிமை கருக்கலைப்பு, கருணைக் கொலை, மரண தண்டனை, தற்காப்புப் போர் ஆகிய விவாதங்களில் முதன்மை பெறுகிறது. வாழும் உரிமை மிக முக்கியமானதாக இருந்தாலும் எல்லா நாடுகளும் சட்டங்களுக்கும் முறைமைகளுக்கும் கட்டுப்பட்டு அரசுகள் மனிதர்களைக் கொல்ல முடியும்.

,

## உணவுக்கான உரிமை

**உணவுக்கான உரிமை** என்பது மக்கள் உணவை உற்பத்திசெய்து, அல்லது கொள்வனவுசெய்து மானத்துடன் உண்பதற்கான உரிமை ஆகும். இது அனைத்துலகச் சட்டங்களில் உறுதிசெய்யப்பட்ட ஓர் அடிப்படை மனித உரிமை ஆகும். இந்த உரிமையின் நீட்சியாக மக்கள் தம்மால் உச்சகட்டமாக முடிந்தளவு போதிய சத்தான உணவை உற்பத்தி செய்ய அல்லது கொளவனவுசெய்யத்தக்க சூழலை ஏதுவாக்குவது அரசுகளின் கடமை ஆகும்.[1] சிறப்பாக, இந்த உரிமை மக்கள் போரால் அல்லது இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இருக்கும் போது, தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் அரசுகள் உணவு வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

## சிந்தனைச் சுதந்திரம்

**சிந்தனைச் சுதந்திரம்** அல்லது **உள்ளுணர்வுக்கான சுதந்திரம்** என்பது ஒருவர் சுந்திரமாக ஒரு உண்மையை, கருத்தை, பார்வையை வைத்திருக்க, கருத்தில்கொள்வதற்கான சுதந்திரம் ஆகும். இது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சமயச் சுதந்திரம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது, ஆனால் வேறு வகையானது. இது உலக மனித உரிமைகள் சாற்றுரை, அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை உட்பட்ட பல்வேறு அனைத்துலகச் மனித உரிமை வெளிப்பாடுகளிலும் உடன்படிக்கைகளாலும் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமை ஆகும்.

# சொத்து உரிமை

**சொத்து உரிமை** என்பது ஒருவர் அல்லது ஒரு குழு நேர்மையான வழியில் உழைத்த சொத்துக்கான உரிமை ஆகும். சொத்தின் சொந்தக்காரர் அந்தச் சொத்தை நுகர, விற்க, வாடகைக்குவிட, பிறருக்கு கையளிக்க, அழிக்க உரிமை பெறுகிறார். ஆதனச் சொத்து (நிலம், வீடு), தனிநபர் சொத்துக்கள் (வாகனம், உடை போன்ற பொருட்கள்), அறிவுசார் சொத்து, பொதுச் சொத்து என்று பல்வேறு வகையான சொத்துக்கள் உள்ளன.

# நன்றி.

http://www.trinitycollegenkl.edu.in/